நவம்பர் 2019

விண்மீன்.காம்

# மூன்றாவது வார நடப்பு நிகழ்வுகள்

15 நவம்பர் – 21 நவம்பர்

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1. கரும்பு விவசாயிகளுக்காக 'e–Ganna' என்ற செயலியை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?**

**A) உத்தரபிரதேசம் ☑**

B) மகாராஷ்டிரா

C) குஜராத்

D) சத்தீஸ்கர்

✓ உத்தரபிரதேச மாநில அரசானது அம்மாநிலத்தில் உள்ள கரும்பு விவசாயிகளுக்காக ஒரு பிரத்தியேக வலைதளத்தையும் 'e–Ganna' என்றவோர் அலைபேசி செயலியையும் அறிமுகம் செய்துள்ளது. இந்த வலைதளம் மற்றும் செயலி ஆகியவை சீட்டுகளைப் பெறுவதற்கான செயல்முறையில் வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்யும். மேலும், கரும்பு விவசாயிகள் ஆலைகளுக்கு கரும்பு வழங்குவதற்கான வசதிகளை எளிமைப்படுத்துவதோடு முறைகேடுகளை சரிபார்க்கவும் இது உதவும்.

**2. 39ஆவது இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியில் சிறப்பு கவனம் பெறும் நாடு எது?**

**A) தென்கொரியா ☑**

B) வியட்நாம்

C) மலேசியா

D) தென்னாப்பிரிக்கா




✓ 39ஆவது இந்திய சர்வதேச கண்காட்சி – 2019 புது தில்லியில் தொடங்குகிறது. 'Ease of doing Business' என்பது இந்தக் கண்காட்சிக்கான கருப்பொருளாகும். உலக வங்கியின், "எளிதாக தொழில் புரிவது குறித்த 2019ஆம் ஆண்டு தரவரிசைப்பாடியலில், 2014ஆம் ஆண்டில் 142ஆவது இடத்தில் இருந்த இந்தியா 63வது இடத்திற்கு உயர்ந்திருந்த இந்தியாவின் தனித்துவமான சாதனைகளின் அடிப்படையில் இந்தக் கருப்பொருள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

✓ மத்திய சிறு குறு & நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சரான நிதின் கட்காரி இந்தக் கண்காட்சியை தொடங்கிவைத்தார். இந்த ஆண்டு (2019) '**கூட்டாளர் நாடு** – Partner Country' எனும் தகுதி **ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய குடியரசு**க்கும், '**சிறப்பு கவனம் பெறும் நாடு** – Focus Country' எனும் தகுதி **தென்கொரிய குடியரசு**க்கும் வழங்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில் பீகார் மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்கள் சிறப்பு கவனம் பெறும் மாநிலங்களாக உள்ளன.

**3. டைம் 100 நெக்ஸ்ட் பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்திய ஓட்டப்பந்தய வீராங்கனை யார்?**

**A) டூட்டி சந்த் ☑** B) ஹிமா தாஸ்

C) சரிதா கெய்க்வாட் D) சதி கீதா



✓ டைம் இதழின் 'TIME 100 NEXT' பட்டியலில், இந்திய ஓட்டப்பந்தய வீராங்கனை டூட்டி சந்த் பெயர் இடம்பெற்றுள்ளது. பொழுதுபோக்கு, வணிகம், விளையாட்டு, அரசியல், மருத்துவம், அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் எதிர்காலத்தை வடிவமைக்கும் 100 வளர்ந்துவரும் பிரபலங்களை இது பட்டியலிட்டு சிறப்பிக்கிறது. உலக பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டியின் 100 மீ., நிகழ்வில் வென்ற முதல் இந்திய ஓட்டப்பந்தய வீராங்கனையாவார் டூட்டி சந்த்.

**4. எந்தக் கருப்பொருளின்கீழ், நற்காற்று உச்சிமாநாடு (Good Air Summit (GAS–2019)) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?**

A) Making India Responsible

**B) Making India Breathe ☑**

C) Making India Clean

D) Making India Green




✓ ஒருங்கிணைந்த சுகாதார மற்றும் நலவாழ்வு கவுன்சிலானது புது தில்லியில், "Making India Breathe" என்ற கருப்பொருளின்கீழ் நற்காற்று உச்சிமாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. இந்த உச்சிமாநாட்டில், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணாக்கர்கள், சுற்றுச்சூழலை பசுமையானதாகவும் மாசற்றதாகவும் மாற்றுவதற்கான உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

✓ சிறு குழந்தைகளையும் குடிமக்களையும் காற்றை தூய்மையாக வைத்துக்கொள்வதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளச்செய்வதும், மாசிலிருந்து சமூகத்தை தூய்மையாக வைத்திருப்பதற்காக தனிநபரின் நடத்தையில் மாற்றத்தைக்கொண்டுவருவதுமே இந்த உச்சிமாநாட்டின் நோக்கமாகும். காஷ்மீர் – கன்னியாகுமரி வரையிலும் அகமதாபாத் – ஐஸ்வால் வரையிலும் என நாடு முழுவதும் நடைபெறும், 'நற்காற்று இயக்கத்தில்' அப்போது மாணவர்கள் தங்களை இணைத்துக் கொண்டனர்.

**5. ஐ.நா. பெண்கள் (UN Women) அமைப்பானது எந்த மாநிலத்தின் பாலின பூங்காவுடன் கூட்டாளராக முன்மொழிந்துள்ளது?**

A) தமிழ்நாடு

**B) கேரளா ☑**

C) கர்நாடகா

D) ஆந்திர பிரதேசம்

✓ தெற்காசியாவில் பாலின சமத்துவத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட திட்டங்கள் மற்றும் பரப்புரைகளை முன்னெடுக்கும் நோக்கத்துடன், ஐ.நா. பெண்கள் அமைப்பானது கேரளாவின் பாலின பூங்காவுடன் கூட்டாளராக முன்மொழிந்துள்ளது.

✓ கோழிக்கோடு பாலின பூங்காவில் பாலின தரவு மையத்தை அமைப்பது, 2020 மார்ச்சில் நடைபெற உள்ள பெண்கள் நிலைமை ஆணையத்தின் 64ஆவது அமர்வின்போதும், 2020 செப்டம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஐ.நா. பொதுச்சபையின் 75ஆவது அமர்வின்போதும் நிகழ்வுகளை நடத்துவது மற்றும் 2019 நவம்பர் 25 முதல் டிசம்பர் 10 வரை "கேரளாவில் 16 நாட்கள் செயல்பாடுகள்" என்றவொரு

மையப்படுத்தப்பட்ட பரப்புரையைத் தொடங்குதல் ஆகியவை இந்த ஒத்துழைப்பின் மூன்று முக்கிய பகுதிகளாகும்.

**6. IUCN ஆசிய பிராந்திய பாதுகாப்பு மன்றத்தின் 7ஆவது பதிப்பு நடைபெற்ற நகரம் எது?**

A) பெய்ஜிங்

B) கொழும்பு

**C) இஸ்லாமாபாத் ☑**

D) புது தில்லி

✓ ஆசியாவின் மிகமுக்கியமான இயற்கை பாதுகாப்பு நிகழ்வுகளுள் ஒன்றான சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு சங்கத்தின் (IUCN) ஆசிய பிராந்திய பாதுகாப்பு மன்றத்தின் 7ஆவது பதிப்பு, நவம்பர் 14 அன்று "Greening Asia for Nature and People" என்ற கருப்பொருளின்கீழ் தொடங்கியது. சமூக சவால்களை எதிர்கொள்வதற்கு இயற்கை சார்ந்த தீர்வுகள் தொடர்பான கருப்பொருள்களில் இந்த மன்றம் தனது கவனத்தைச் செலுத்துகிறது.

✓ நான்காண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்நிகழ்வில் தெற்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளைச் சேர்ந்த அரசாங்கங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் பெருமளவில் பங்கேற்றனர். உலகின் தற்போதைய மக்கட்டொகையில் 60 சதவீதத்தினர் ஆசிய மக்களாவர்.

✓ ஏறக்குறைய உலகிலுள்ள ஏழ்மையான மக்களுள் பாதிபேர் ஆசியாவில் உள்ளனர். உலக வங்கியின் 2018ஆம் ஆண்டைய அறிக்கையின்படி, வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழும் 783 மில்லியன் ஏழை மக்களுள், 33 சதவீதத்தினர் தெற்காசியாவிலும், 9 சதவீதத்தினர் கிழக்காசியா & பசிபிக் பகுதிகளிலும் வாழ்கின்றனர். ஆசிய பிராந்திய பாதுகாப்பு மன்றத்தில் நடத்தப்படும் கலந்துரையாடல்கள் அடுத்த தசாப்தத்திற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை வடிவமைக்க உதவும். இது, வரும் 2020 ஜூன் மாதம் பிரான்சின் மார்சேயிலில் நடைபெறவுள்ள IUCN உலக பாதுகாப்பு மாநாட்டுக்கும் ஊட்டமளிக்கும்.

**7. SWIFT'க்கு மாற்றாக ஒன்றை உருவாக்குவதற்காக இந்தியா எந்தெந்த நாடுகளுடன் கூட்டு சேர்ந்துள்ளது?**

A) தென்னாப்பிரிக்கா மற்றும் மாலத்தீவு

B) வங்கதேசம் மற்றும் இலங்கை

**C) இரஷ்யா மற்றும் சீனா ☑**

D) பிரான்சு மற்றும் ஜப்பான்

✓ அமெரிக்காவின் Society for Worldwide Interbank Financial Telecommunication (SWIFT) கொடுப்பனவு அமைப்புக்கு மாற்றாக ஒரு புதிய கொடுப்பனவு அமைப்பை உருவாக்குவதற்காக இந்தியா, இரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் கூட்டிணைந்துள்ளன. இந்நடவடிக்கை, அமெரிக்காவின் பொருளாதாரத்

தடைகளை எதிர்கொள்ளும் நாடுகளுடன் வர்த்தகம் புரிவதை எளிமையாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இரஷ்ய வங்கியின் (SPFS) நிதியியல் செய்தி முறைமையை சீனத்தின் வங்கிகளுக்கு இடையேயான எல்லைதாண்டிய கொடுப்பனவு அமைப்பான Chartered Institute of Procurement & Supply (CIPS) உடன் இணைக்க இந்நாடுகள் முடிவுசெய்துள்ளன. ஒரு குறிப்பிட்ட நிதியியல் முறைமைக்கு ஏற்ப கொடுப்பனவு செய்திகள் குறியீடுமாற்றம் செய்யப்படும்போது, இப்புதிய கொடுப்பனவு முறைமையானது நுழைவாயில் மாதிரியாக செயல்படும்.

**8.போலி தயாரிப்புகளை நீக்குவதற்காக இந்தியாவில், 'Project Zero' என்றவொன்றை அறிமுகம் செய்துள்ள தொழில்நுட்ப நிறுவனம் எது?**

A) பேடிஎம்

**B) அமேசான் ☑**

C) பிளிப்கார்ட்

D) இந்தியா மார்ட்

✓ மின்னணு வணிக நிறுவனமான அமேசான், இந்தியாவில், 'Project Zero' என்றவொன்றை அறிமுகம் செய்துள்ளது. இது, தயாரிப்பு நிறுவனங்களுக்கு அமேசான் தளத்திலிருந்து போலி தயாரிப்புகளை அடையாளங்காணவும் அதனை நீக்கவும் கூடுதல் கருவிகளை வழங்கும். இது, 'தானியங்கி பாதுகாப்புகள்', 'போலி தயாரிப்புகளை தானே நீக்கும் கருவி' மற்றும் 'தயாரிப்பு வரிசைப்படுத்தல்' ஆகிய மூன்று கருவிகளைக் கொண்டுள்ளது.

**9.ரோமில் நடந்த விதை ஒப்பந்த நிர்வாகக்குழுவின் 8ஆவது அமர்வில் பங்கேற்ற இந்திய தூதுக்குழுவை வழிநடத்தியது யார்?**

A) பர்சோட்டம்பாய் ரூபாலா


B) அபிஷேக் சிங் சௌகான்

C) கிருஷ்ண இராஜ்

**D) நரேந்திர சிங் தோமர் ☑**

✓ இத்தாலியின் ரோம் நகரத்தில் உணவு மற்றும் வேளாண்மைக்கான தாவர மரபணு வளங்களின் சர்வதேச ஒப்பந்தத்தின் (ITPGRFA) எட்டாவது அமர்வில் இந்தியா பங்கேற்றது. இந்தியாவின் சார்பாக மத்திய வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் கலந்துகொண்டார். இந்த அமர்வில் சுமார் 146 நாடுகள் பங்கேற்றன. இந்த ஒப்பந்தம் உயிரி–பன்முகத்தன்மை தொடர்பான உடன்படிக்கைக்கு இசைவாக உள்ளது. பன்னாட்டு அமைப்புகளான FAO, ஐக்கிய நாடுகள் போன்றவையும் இந்த அமர்வின் ஒருபகுதியாக இருந்தன.

**10.விளையாட்டில் சூது (match–fixing) & பணையம் (sports betting) தொடர்பான குற்றங்களை பெருங்குற்றமென அறிவித்துள்ள முதல் தெற்காசிய நாடு எது?**




A) வங்கதேசம்

B) பாகிஸ்தான்

**C) இலங்கை ☑**

D) இந்தியா

- ✓ விளையாட்டில் சூது (match–fixing) மற்றும் பணையம் (sports betting) தொடர்பான குற்றங்களை பெருங்குற்றமென அறிவித்துள்ள முதல் தெற்காசிய நாடாக இலங்கை திகழ்கிறது. "விளையாட்டு தொடர்பான குற்றங்களைத்தடுப்பது" எனப் பெயரிடப்பட்ட மசோதாவை இலங்கை நாடாளுமன்றம் நிறைவேற்றியபின் இது நிகழ்ந்துள்ளது. மசோதாவை உருவாக்கும் பணியின்போது, இலங்கையின் விளையாட்டு அமைச்சகம், பன்னாட்டுக்கிரிக்கெட் கவுன்சிலின் (ICC) ஊழல் தடுப்பு பிரிவுடன் மிகவும் நெருக்கமாக பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.
- ✓ இந்தப் புதிய சட்டமானது அனைத்து விதமான விளையாட்டுக்களுக்கும் பொருந்தும். அதன்படி, ஒரு நபர், விளையாட்டில் சூது தொடர்பான குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டால், அவர், பத்து ஆண்டுகள்வரை சிறைவாசம் அனுபவிக்க நேரிடும். மேலும் பிற அபராதங்களையும் செலுத்த வேண்டியிருக்கும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ சென்னை உயர்நீதிமன்றத்தின் 49ஆவது தலைமை நீதிபதியாக பாட்னா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பணியிலிருந்த நீதியரசர் ஏ.பி.சாஹி பதவியேற்றார்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. எந்நாட்டின் அதிபர், 2020ஆம் ஆண்டு இந்திய குடியரசுநாள் விழாவுக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார்?**



A) இத்தாலி

**B) பிரேசில் ☑**

C) போர்ச்சுகல்

D) நியூசிலாந்து

✓ 2020 ஜனவரி 26 அன்று நடைபெறவுள்ள இந்திய குடியரசு நாள் விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க வருமாறு இந்தியப்பிரதமர் மோடி, பிரேசில் நாட்டு அதிபர் ஜெய்ர் போல்சனரோவுக்கு விடுத்த அழைப்பின் பேரில் அவர் சிறப்பு விருந்தினராக பங்கேற்கவுள்ளார். 11ஆவது BRICS நாடுகள் மாநாட்டில் பங்கேற்பதற்காக, பிரேசிலின் தலைநகரமான பிரேசிலியாவுக்குச் சென்ற பிரதமர் மோடி, அப்போது அவருக்கு அழைப்புவிடுத்தார்.

**2. "The Metropolitan Museum of Art"இன் கௌரவ அறங்காவலராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?**




**A) நீதா அம்பானி ☑**

B) ரத்தன் டாடா

C) அமிதாப்பச்சன்

D) பிரியங்கா சோப்ரா

✓ ரிலையன்ஸ் அறக்கட்டளையின் தலைவரான நீதா அம்பானி, "The Metropolitan Museum of Art"இன் கௌரவ அறங்காவலராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய கலை & கலாசாரத்தை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான அவரது அர்ப்பணிப்பிற்காக அவருக்கு இந்தக் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு கௌரவிக்கப்பட்ட முதல் இந்தியரும் இவர்தான்.

✓ 2017ஆம் ஆண்டில் அவர் இந்திய குடியரசு தலைவரின் கைகளிலிருந்து மதிப்புமிக்க 'இராஷ்டிரிய கேல் புரோட்சஹன்' விருதை, ரிலையன்ஸ் அறக்கட்டளையின் விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்காக பெற்றார். 2016ஆம் ஆண்டில், போர்ப்ஸ் நிறுவனம், அவரை ஆசியாவின் வணிகத்துறைசார்ந்த 50 ஆற்றல்வாய்ந்த பெண்களுள் ஒருவராக குறிப்பிட்டது. சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியப்பெண்மணியும் இவர்தான்.

**3. இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் புதிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



A) சுதிர் குமார்

B) பாயல் சர்மா

C) கீர்த்தி படேல்

**D) கமல வர்தன ராவ் ☑**

✓ இந்திய சுற்றுலா வளர்ச்சிக்கழகமானது G கமல வர்தன ராவ் IAS (கேரளா: 1990) அவர்களை அதன் புதிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக நியமித்துள்ளது. இந்த நியமனத்திற்கு முன்பு அவர் கேரள மாநில அரசின் தலைமைச் செயலாளராக பதவியிலிருந்தார். 2014–15 இடைப்பட்ட காலத்தில், அவர், கேரள மாநில சுற்றுலாத்துறையின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். இந்திய புகையிலை வாரியத்தின் தலைவர், மீன்வளத்துறை இயக்குநர், ஆந்திர பிரதேச மாநில அரசின் சுற்றுலா மற்றும் கலாசாரத்துறை இயக்குநர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளில் அவர் பணியாற்றியுள்ளார்.

**4.எந்த மாநிலத்தில், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான 'Tiger TRIUMPH' என்ற முதலாவது முப்படை சேவைகள் பயிற்சி தொடங்கியுள்ளது?**

A) மத்தியபிரதேசம்

**B) ஆந்திர பிரதேசம் ☑**

C) ஹிமாச்சல பிரதேசம்

D) உத்தர பிரதேசம்



✓ ஒன்பது நாட்கள் நடைபெறும் 'Tiger TRIUMPH' என்ற இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான முதல் முப்படை இராணுவப்பயிற்சியானது கிழக்குக் கடற்பரப்பில் (விசாகப்பட்டினம் & காக்கிநாடா) தொடங்கியது. ஒருங்கிணைந்த பாதுகாப்புப் பணியாளர்கள் தலைமையகத்தின் தலைமையில் இந்தப் பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது மனிதநேய அடிப்படையிலான நிவாரண நடவடிக்கைகள் மற்றும் பேரிடர் மீட்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும்.

**5.நடப்பாண்டுக்கான (2019) உலக கபடி கோப்பைப் போட்டியை நடத்த முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

A) தமிழ்நாடு

**B) பஞ்சாப் ☑**

C) கேரளா

D) திரிபுரா



✓ நடப்பாண்டுக்கான (2019) உலக கபடி கோப்பைப் போட்டியானது டிச.1–9 வரை பஞ்சாப் மாநிலத்தில் நடைபெறவுள்ளது. இதனை பஞ்சாப் மாநில அரசு ஏற்பாடுசெய்கிறது. நடப்பாண்டில் நடைபெறும் இந்தப் போட்டியானது சீக்கிய மத குரு குருநானக் தேவின் 550ஆவது பிறந்தநாளுக்கென பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்படுகிறது. இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை, கென்யா, நியூசிலாந்து, பாகிஸ்தான் மற்றும் கனடா ஆகிய ஒன்பது நாடுகளின் அணிகள் இந்தப்போட்டிகளில் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**6. 2020ஆம் ஆண்டுக்கான உலக நினைவுச்சின்ன கண்காணிப்புப் பட்டியலில் தேர்ந்தெடுக்க–ப்பட்டுள்ள சுரங்க பவதி அமைந்துள்ள மாநிலம் எது?**

A) ஆந்திர பிரதேசம்

B) நாகாலாந்து

**C) கர்நாடகா ☑**

D) மிசோரம்



✓ கர்நாடகாவின் பீஜப்பூரில் அமைந்துள்ள சுரங்க பவதி, நியூயார்க்கை தளமாகக்கொண்ட ஓர் அரசுசாரா அமைப்பால் 2020ஆம் ஆண்டுக்கான உலக நினைவுச்சின்ன கண்காணிப்புப் பட்டியலில் (World Monument Watch List) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

✓ உலகெங்குமுள்ள 24 நினைவுச்சின்னங்களுடன் "தக்காண பீடபூமியின் பழங்கால கால்வாய் அமைப்பு" என்ற பிரிவின்கீழ் இச்சுரங்க பவதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதில் ஷா–1இன் காலத்தில், விஜயபுரத்தில் 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இது, சுரங்கங்கள் மூலம் நீரை வழங்கும் பண்டைய கரேஸ் அமைப்பின் ஒருங்கிணைந்த பகுதிகளுள் ஒன்றாகும்.

**7. SCO 2020இன் 19ஆவது அரசாங்கத் தலைவர்களின் கவுன்சில் கூட்டத்தை, இந்தியா, எந்த நகரத்தில் நடத்துகிறது?**

A) சென்னை

**B) புது தில்லி ☑**

C) புனே

D) திருவனந்தபுரம்

✓ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) 2020இன் 19ஆவது அரசாங்கத் தலைவர்களின் கவுன்சில் கூட்டத்தை இந்தியா நடத்துகிறது. 2017ஆம் ஆண்டில் இவ்வமைப்பில் இணைந்த பின்னர், இந்தியா ஏற்பாடுசெய்யவுள்ள 8 உறுப்பினர்கள்கொண்ட இவ்வமைப்பின் முதல் உயர்மட்டக் கூட்டமாகும் இது.

✓ SCO என்பது சீனா தலைமையிலான 8 உறுப்பு நாடுகளின் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு முகமை ஆகும். இதில், இந்தியாவும் பாகிஸ்தானும் முழுநேர உறுப்பினர்களாக 2017இல் இணைந்தன. அதன் நிறுவன உறுப்பினர்களுள் சீனா, இரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் அடங்கும். அரசாங்க தலைவர்களின் உச்சிமாநாடு, அண்மையில் தாஷ்கண்டில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

**8.உலக கருணை நாள் கொண்டாடப்படும் தேதி எது?**

A) நவம்பர் 14

**B) நவம்பர் 13 ☑**

C) நவம்பர் 15

D) நவம்பர் 16



- ✓ ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 13 அன்று உலக கருணை நாள் அனுசரிக்கப்படுகிறது. இது, 1998ஆம் ஆண்டில் கருணை இயக்கம் சார்பில் தொடங்கப்பட்டது. அதன்பின், பலநாடுகள் கருணை நாளை கடைபிடிக்கத்தொடங்கின. 1997ஆம் ஆண்டு டோக்கியோவில் அமைக்கப்பட்ட இந்த இயக்கமானது மதம், அரசியல் என அனைத்துக்கும் அப்பாற்பட்டு விளங்குகிறது. *"Empathy, encouraging people across the globe to better understand "the pains of others" and touch their lives "positively"* என்பது நடப்பாண்டில் (2019) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**9. நடப்பாண்டுக்கான (2019) BRICS – இளம் கண்டுபிடிப்பாளர் பரிசை (Young Innovator Prize) வென்ற இந்திய அறிஞர் யார்?**

A) சுனில் ராஜ்புத்

**B) இரவி பிரகாஷ் ☑**

C) இலக்ஷ்மி ஜைன்

D) தீபங்கர் குமார்




- ✓ சிறு மற்றும் குறு கிராமப்புற பால் விவசாயிகளுக்கு மலிவு விலையில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஒரு பால் குளிரூட்டும் அலகைக் கண்டுபிடித்ததற்காக இந்திய முனைவர் இரவி பிரகாஷ் அவர்கள் BRICS – இளம் கண்டுபிடிப்பாளர் பரிசை வென்றுள்ளார்.
- ✓ பெங்களூரில் உள்ள ICAR – தேசிய பால் ஆராய்ச்சி நிறுவனத்தின் முனைவரான இரவி பிரகாஷ், 4ஆவது BRICS – இளம் அறிவியலாளர் மன்றத்திற்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் பிரேசிலுக்கு அனுப்பப்பட்ட 21 பேர்கொண்ட தூதுக்குழுவில் ஒருவராவார். "Cybersecurity and Bio–economy" என்பது இந்த மன்றத்துக்கான கருப்பொருளாகும்.

**10. நடப்பாண்டின் (2019) சர்வதேச லாவி கண்காட்சி, இமாச்சலபிரதேசத்தின் எம்மாவட்டத்தில் நடைபெற்றது?**

**A) சிம்லா ☑**

B) ஹமீர்பூர்

C) காங்ரா

D) குலு



- ✓ இமாச்சலபிரதேச மாநிலத்தின் சிம்லா மாவட்டத்திலுள்ள இராம்பூரில் நவ.11–14 வரை சர்வதேச லாவி கண்காட்சி நடைபெற்றது. திபெத்துக்கும் புஷாருக்கும் இடையே வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக இராம்பூர் புஷார் மாகாணத்தைச்சேர்ந்த இராஜா கெஹரி சிங் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அப்போது, பதினேழாம் நூற்றாண்டில், அவரால் இந்தக் கண்காட்சி தொடங்கிவைக்கப்பட்டது.
- ✓ அழிவின் விளிம்பிலிருக்கும், "குளிர் பாலைவனத்தின் கப்பல்" என்று அழைக்கப்படும் சாமூர்த்தி குதிரைகளின் விற்பனையும் கொள்முதலுமே இந்தக் கண்காட்சியின் முக்கிய அம்சமாகும்.

# நடப்பு நிகழ்வுகள்


**1.நடப்பாண்டு (2019) உலகளாவிய கையூட்டு அபாயக்குறியீட்டில் (Global Bribery Risk Index) இந்தியாவின் தரநிலை என்ன?**

**A) 78ஆவது ☑**

B) 93ஆவது

C) 102ஆவது

D) 55ஆவது



✓ TRACE கையூட்டு அபாய மேட்ரிக்ஸ் வெளியிட்டுள்ள நடப்பாண்டு (2019) உலகளாவிய கையூட்டு அபாயக் குறியீட்டில், 178 நாடுகளுள் இந்தியா 78ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. அரசாங்கத்துடனான வணிகத்தொடர்பு, கையூட்டு ஒழிப்பைத் தடுத்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் சிவில் சமூகத்தின் மேற்பார்வை ஆகிய 4 அளவுருக்களின்கீழ் நாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. TRACE என்பது அமெரிக்காவைச்சேர்ந்த ஓரமைப்பாகும். இது, பட்டியலிலுள்ள நாடுகளில் இயங்கிவரும் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் கையூட்டு அபாயத்தின் அடிப்படையில் அந்நாடுகளை தரவரிசைப்படுத்தியுள்ளது.

**2. 'நாடு – நேடு' என்ற திட்டத்தை தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

A) தமிழ்நாடு

**B) ஆந்திரபிரதேசம் ☑**

C) கேரளா

D) கர்நாடகா




✓ ஆந்திரபிரதேச மாநில முதலமைச்சர் Y S ஜெகன்மோகன் ரெட்டி, அரசுப்பள்ளிகளில் ஒன்று – ஆறாம் வகுப்பு வரை ஆங்கிலவழிக் கல்வியை அறிமுகப்படுத்தும் 'நாடு – நேடு' என்னும் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்தத் திட்டம், முதற்கட்டமாக 15,715 பள்ளிகளில் செயல்படுத்தப்படும். பின்னர் ₹12,000 கோடி மதிப்பீட்டில் அனைத்து பள்ளிகளிலும் மூன்றாண்டுகளுக்குள் செயல்படுத்தப்படும்.


**3.அண்மையில் காலமான வசிஷ்ட நாராயண சிங், எந்தத் துறைசார்ந்தவராவார்?**

**A) கணிதம் ☑**

B) உயிரியல்

C) வேதியியல்

D) இயற்பியல்



✓ பிரபல கணிதவியலாளரான வசிஷ்ட நாராயண சிங், பாட்னாவில் நவ.16 அன்று காலமானார்.

**4.வேளாண்மை & தோட்டக்கலை விளைபொருட்கள் குறித்த முதலாவது சர்வதேச வாங்குபவர் விற்பனையாளர் சந்திப்பு தொடங்கிய மாநிலம் எது?**

A) தமிழ்நாடு

**B) அருணாச்சல பிரதேசம் ☑**

C) ஹரியானா

D) கேரளா

✓ வேளாண்மை மற்றும் தோட்டக்கலை விளைபொருட்கள் குறித்த முதலாவது சர்வதேச வாங்குபவர் – விற்பனையாளர் சந்திப்பானது அருணாச்சல பிரதேச மாநிலத்தின் தலைநகரான இடாநகரில் நவ.14 அன்று நடைபெற்றது. இதனை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ்வரும் வர்த்தகத்துறையின் கீழியங்கும் வேளாண்மை & பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஏற்பாடுசெய்துள்ளது.

✓ விவசாயப்பொருட்களின் ஏற்றுமதியை குறிப்பாக வடகிழக்கு பிராந்தியத்திலிருந்து அதிலும் குறிப்பாக அருணாச்சலபிரதேச மாநிலத்தின் விவசாய விளைபொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதே இந்தச் சந்திப்பின் நோக்கமாகும்.

**5. 'தங்க இலை விருதுகள்' வழங்கப்படுகின்ற துறை எது?**



**A) புகையிலை ☑**

B) காபி

C) தேயிலை

D) சணல்

✓ நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்ற டேப் எக்ஸ்போ–2019 நிகழ்வில், இந்திய புகையிலை வாரியத்துக்கு (குண்டூர்) தங்க இலை விருது வழங்கப்பட்டது. இந்தியாவில் Flue–Cured Virginia (FCV) வகை புகையிலை சாகுபடியில் பல்வேறு நிலைத்தன்மை (பசுமை) முயற்சிகளைத் தொடங்கியதற்காக நடப்பாண்டிற்கான (2019) "மிகவும் ஈர்க்கக்கூடிய பொதுசேவை முன்முயற்சி – Most Impressive Public Service Initiative" பிரிவில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

✓ புகையிலை ரிப்போர்ட்டர் என்ற சர்வதேச இதழால், புகையிலை துறையில் தொழிற்முறை சிறப்பையும் அர்ப்பணிப்பையும் அங்கீகரிப்பதற்காக "தங்க இலை விருது"கள் உருவாக்கப்பட்டன.

**6. FIFAஇன் சர்வதேச கால்பந்து மேம்பாட்டுத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளவர் யார்?**



A) இராபர்ட் ஜெனி

**B) ஆர்சேன் வெங்கர் (Arsene Wenger) ☑**

C) ஹரேந்திர சிங்

D) இகோர் ஸ்டிமாக்

✓ மூத்த பயிற்சியாளரான ஆர்சென் வெங்கர், FIFAஇன் சர்வதேச கால்பந்து மேம்பாட்டுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம், கால்பந்து விளையாட்டின் வளர்ச்சிக்கு அவர் பொறுப்பாளராக இருப்பார். மேலும் விளையாட்டுச் சட்டவிதிகளில் சாத்தியமான மாற்றங்கள் ஏற்படுத்துவது உள்ளிட்ட தொழில்நுட்ப விஷயங்களிலும் அவர் முன்னிலை வகிப்பார்.

**7.எந்தத் தேதியில், இந்தியாவில், தேசிய பத்திரிகை நாள் கொண்டாடப்படுகிறது?**

A) நவம்பர் 15

B) நவம்பர் 14

C) நவம்பர் 17

**D) நவம்பர் 16 ☑**




✓ 1966ஆம் ஆண்டில் இந்திய பிரஸ் கவுன்சில் நிறுவப்பட்டதை நினைவுகூரும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் நவ.16 அன்று தேசிய பத்திரிகை நாள் (National Press Day) கொண்டாடப்படுகிறது. இந்தியப் பத்திரிகைகளின் சுதந்திரம் மற்றும் பொறுப்பின் அடையாளமாகவும் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

**8.பாரதீய போஷான் கிருஷி கோஷை தொடங்க முடிவுசெய்துள்ள மத்திய அமைச்சகம் எது?**

A) நிதி அமைச்சகம்

B) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**C) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ☑**

D) மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்



✓ பாரதீய போஷன் கிருஷி கோஷை (BPKK) நவ.18 அன்று புது தில்லியில் தொடங்க மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் ஜவுளி அமைச்சகம் முடிவுசெய்துள்ளது. சிறந்த ஊட்டச்சத்து விளைவுகளுக்காக இந்தியாவில் உள்ள 128 வேளாண்–காலநிலை மண்டலங்களைச் சேர்ந்த பல்வேறு பயிர்களின் களஞ்சியமாக BPKK உள்ளது.


**9.பார்சிலோனாவில் நடைபெற்ற நடப்பாண்டு (2019) ஆசிய திரைப்பட விழாவில், "சிறந்த இயக்குநருக்கான" விருதை வென்ற இந்திய திரைப்படம் எது?**

A) சூப்பர் 30

B) வார்

**C) போன்ஸ்லே ☑**

D) பானிபட்




✓ தேவாஷிஷ் மகிஜா இயக்கி, மனோஜ் பாஜ்பாய் நடித்து விமர்சன ரீதியாக பாராட்டப்பட்ட திரைப்படமான "போன்ஸ்லே", பார்சிலோனாவில் நடந்த நடப்பாண்டு (2019) ஆசிய திரைப்பட விழாவில், மதிப்புமிக்க விருதுகளை வென்றுள்ளது. 'சிறந்த திரைக்கதை' மற்றும் 'சிறந்த இயக்குநர்' ஆகிய இரு பிரிவுகளில் இரண்டு விருதுகளை இந்தத் திரைப்படம் வென்றது.

✓ அவர் புலம்பெயர்ந்தோரின் தத்தளிப்புகளுக்கும் உள்ளூர் அரசியல்வாதிகளுடனான அவர்களது போராட்டங்களுக்கும் உதவ முயற்சிக்கும் ஓர் இரண்டாம்–நிலை காவலரைச்சுற்றி வருகிறது இப்படம். பல்வேறு இனக்குழுக்களின் குமுறல்களைக்கூறும் இந்தத்திரைப்படம், மும்பைபோன்ற ஒரு நகரத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை யதார்த்தமாக எடுத்துக்காட்டுகிறது.

**10. 25ஆவது கொல்கத்தா சர்வதேச திரைப்பட விழாவில் (KIFF) சிறந்த படத்திற்கான "கோல்டன் இராயல் வங்கப்புலி" விருதைப்பெற்ற திரைப்படம் எது?**




A) Aga's House

B) The Painted Bird

C) Run Kalyani

**D) The Weeping Woman ☑**

✓ ஸ்பானிய மொழித் திரைப்படமான 'தி வீப்பிங் வுமன்' (La llorona), 25ஆவது கொல்கத்தா சர்வதேச திரைப்பட விழாவில் (KIFF) சிறந்த திரைப்படத்திற்கான, "கோல்டன் இராயல் வங்கப்புலி" விருதைப் பெற்றுள்ளது.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ 'செக்கிழுத்த செம்மல்' **வ**ள்ளிநாயகம் **உ**லகநாதன் **சி**தம்பரனார் அவர்களின் 83ஆவது நினைவுநாள்.

✓ ஆளுநரின் செயலாளராக இருந்த இராஜகோபால் IAS, தமிழ்நாட்டின் தலைமை தகவலாணையராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்குபதிலாக ஆனந்த்ராவ் விஷ்ணு பாட்டீல் IAS, ஆளுநரின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## நடப்பு நிகழ்வுகள்

**1. ஆறாவது ASEAN பாதுகாப்பு அமைச்சர்களின் கூட்டம்–பிளஸ் (ADMM–பிளஸ்) நடைபெற்ற நகரம் எது?**



A) கொழும்பு

B) புது தில்லி

C) ஹனோய்

**D) பாங்காக் ☑**

✓ ஆறாவது ASEAN பாதுகாப்பு அமைச்சர்களின் கூட்டம்–பிளஸ் (ADMM–பிளஸ்–2019) ஆனது சமீபத்தில் தாய்லாந்தின் பாங்காக்கில் நவ.18 அன்று நடைபெற்றது. பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் மற்றும் ADMM–பிளஸ் நாடுகளைச் சேர்ந்த பதினேழு பாதுகாப்பு அமைச்சர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். பிராந்தியத்திற்கு வெளியே உள்ள நாடுகளின் பாதுகாப்பு அமைச்சகத்துடன், பாதுகாப்பு அடிப்படையிலான ஒத்துழைப்புகளை நாடுவதே இதன் நோக்கமாகும்.

**2. இலங்கையின் புதிய அதிபராக பதவியேற்றுள்ளவர் யார்?**



**A) கோத்தபய இராஜபக்ஷ ☑**

B) பிரியந்த சிறிசேனா

C) நமல் இராஜபக்ஷ

D) கரு ஜெயசூரியா

✓ சர்ச்சைக்குரிய போர்க்காலத்திய பாதுகாப்புச் செயலாளரான கோத்தபய இராஜபக்ஷ, இலங்கையின் ஏழாவது அதிபராக நவம்பர் 18 அன்று அனுராதபுரத்தில் உள்ள ருவான்வெலிசாயவில் பதவியேற்றுக் கொண்டார். முன்னாள் அதிபர் மைத்ரிபால சிறிசேனாவுக்குப்பின் அதிபராக தேர்தெடுக்கப்பட்டுள்ள இவர், அடுத்துவரும் ஐந்தாண்டு காலத்திற்கு இலங்கையின் அதிபராக இருப்பார்.

✓ பதவியேற்பு விழாவுக்கு முன்பாக, மகாமேகவனத் தோட்டத்தில் உள்ள புனித அத்திமரமான ஜெயஸ்ரீ மகாபோதியையும், ருவான்வெலிசாயவிலும் இலங்கையின் புதிய அதிபர் வழிபாடு மேற்கொண்டார்.

**3. முதலாவது சர்வதேச குத்துச்சண்டை அமைப்பு (AIBA) விளையாட்டு வீரர்கள் ஆணையத்தின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திய குத்துச்சண்டை வீரர் / வீராங்கனை யார்?**



A) சிவ தாபா

**B) லைஷ்ராம் சரிதா தேவி ☑**

C) மேரி கோம்

D) விஜேந்தர் சிங்

✓ இந்திய குத்துச்சண்டை வீராங்கனையான மணிப்பூரைச்சேர்ந்த லைஷ்ராம் சரிதா தேவி முதலாவது சர்வதேச குத்துச்சண்டை அமைப்பு (AIBA) விளையாட்டு வீரர்கள் ஆணையத்தின் உறுப்பினராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். முகமது அலியின் சாதனைகளால் ஈர்க்கப்பட்ட அவர், 2000ஆம் ஆண்டில் தொழிற்முறை குத்துச்சண்டை வீராங்கனையானார். தற்சமயம் அவர் மணிப்பூர் மாநில காவல்துறையில் DSPஆக பணியாற்றி வருகிறார்.

✓ இரஷ்யாவில் நடந்த நடப்பாண்டு (2019) AIBA ஆண்கள் மற்றும் பெண்கள் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பின்போது தடகள ஆணைய உறுப்பினர்களின் தேர்தல் நடத்தப்பட்டது. உலகெங்கிலும் உள்ள குத்துச்சண்டை வீரர் / வீராங்கனைகள், புதிய உறுப்பினர்களுக்கு தங்களின் வாக்கினை செலுத்தினர். ஐரோப்பாவிற்கு இரண்டு பிரதிநிதிகளும், ஐரோப்பாவைத் தவிர பிற கண்டங்களுக்கு தலா ஒரு பிரதிநிதியும் தேர்தெடுக்கப்பட்டனர்.


**4. இந்தியாவின் புதிய தலைமை நீதிபதியாக பதவியேற்றுள்ள நீதிபதி சரத் அரவிந்த் பாப்டே, எந்த உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியாக இருந்தார்?**

**A) மத்தியபிரதேசம் ☑**

B) ஆந்திர பிரதேசம்

C) மகாராஷ்டிரா

D) உத்தர பிரதேசம்



✓ மத்தியபிரதேச மாநில உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியாக இருந்த நீதிபதி சரத் அரவிந்த் பாப்டே, இந்தியாவின் நாற்பத்தேழாவது தலைமை நீதிபதியாக இந்திய குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் அவர்களால் குடியரசுத்தலைவர் மாளிகையில் உள்ள தர்பார் மண்டபத்தில் பதவிப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

✓ உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக 17 மாதங்கள் பதவியில் இருக்கப்போகும் இவர், 2021 ஏப்.23 அன்று ஓய்வுபெறுவார். அயோத்தி வழக்கு தீர்ப்பு உட்பட பல முக்கிய வழக்குகளில் இவர் தீர்ப்பளித்தார். முன்னாள் தலைமை நீதிபதி இரஞ்சன் கோகோய் மீதான பாலியல் குற்றச்சாட்டு குறித்து விசாரித்த அமர்விற்கு சரத் அரவிந்த் பாப்டே தலைமைவகித்தார். இந்த வழக்கில் இரஞ்சன் கோகாய் குற்றமற்றவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. மகாராஷ்டிராவைச்சேர்ந்த வழக்குரைஞர் குடும்பப் பின்னணியைச்சேர்ந்த இவர், பிரபல மூத்த வழக்குரைஞரான அரவிந்த் ஸ்ரீனிவாஸ் பாப்டேவின் மகனாவார்.

**5. மாநில நிர்வாகத்தில் ஊழலைக்கட்டுப்படுத்த உதவுவதற்காக ஆந்திர பிரதேச மாநில அரசு தேர்வுசெய்துள்ள IIM எது?**

A) IIM கல்கத்தா

B) IIM இந்தூர்

**C) IIM அகமதாபாத் ☑**

D) IIM பெங்களூர்

- ✓ மாநில நிர்வாகத்தில் ஊழலைக் கட்டுப்படுத்த உதவுவதற்காக, ஆந்திர பிரதேச மாநில அரசானது, IIM அகமதாபாத்தை (IIM–A) தேர்வுசெய்துள்ளது. ஊழல் தொடர்பாக அரசுத்துறைகளில் உள்ள கட்டமைப்புச் சிக்கல்களை இந்த நிறுவனம் ஆய்வு செய்து அவற்றைக் கையாள்வதற்கான நடவடிக்கைகளை கொண்டு வரும். ஊழல் மலிந்துள்ள சில அரசுத்துறைகளில் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.
- ✓ IIM–Aஇன் அறிக்கையின் அடிப்படையில், ஊழல் மீதான முழுமையான ஒடுக்குமுறைக்கு PC சட்டத்தை அரசாங்கம் பொருத்தமான முறையில் திருத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**6.உலக நலவாழ்வு அமைப்பால் (WHO) அங்கீகரிக்கப்பட்ட, குடற்காய்ச்சல் நோய்க்கான (Typhoid) தடுப்பூசியை அறிமுகப்படுத்தியுள்ள உலகின் முதல் நாடு எது?**

A) இலங்கை

**B) பாகிஸ்தான் ☑**

C) இந்தியா

D) வங்கதேசம்




- ✓ உலக நலவாழ்வு அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட குடற்காய்ச்சல் நோய்க்கான Typhoid Conjugate Vaccine (TCV) தடுப்பூசியை உலகிலேயே முதன்முறையாக பாகிஸ்தான் அறிமுகப்படுத்தியுள்ளது. அந்நாட்டிலுள்ள சிந்துமாநிலத்தில் குடற்காய்ச்சலால் ஏராளமானோர் ஆண்டுதோறும் உயிரிழப்பதால், அங்கு முதன்முதலில் இந்தத் தடுப்பூசி அறிமுகம் செய்யப்பட்டது.
- ✓ ஜெனிவா நகரத்தைச்சேர்ந்த கவி (Gavi) தடுப்பூசி நிறுவனத்தின் உதவியுடன் கடந்த இருவாரங்களாக தடுப்பூசி பரப்புரை செய்யப்பட்டுள்ளது. TCV தடுப்பூசி ஒன்பது மாதம் முதல் 15 வயதுக்குட்டவர்கள் வரை ஆண்டுக்கு ஒருமுறை போடும் தடுப்பூசியாகும். இது மலிவுவிலையில், அதிக திறன்மிகுந்த தடுப்பூசி என்பது குறிப்பிடத்தக்கது. குடற்காய்ச்சல் என்பது ஒரு தொற்றுநோயாகும். இது பொதுவாக, அசுத்தமாக்க –ப்பட்ட உணவு அல்லது தண்ணீரை உட்கொள்ளும்போது விரைவாக பரவுகின்றது.

**7.மெய்நிகர் வகுப்புகள் திட்டத்தை தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

A) சத்தீஸ்கர்

B) ஜார்கண்ட்

**C) உத்தரகண்ட் ☑**

D) பீகார்



- ✓ உத்தரகண்ட் மாநில முதலமைச்சர் திரிவேந்திர சிங் ராவத், அண்மையில், மாநிலத்தில் உள்ள 500 அரசு மேல்நிலைப்பள்ளிகளை மெய்நிகர் வகுப்பறைகளுடன் இணைக்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த மெய்நிகர் வகுப்புகளில், காணொளிக் காட்சிகள் மூலம் மாணவர்கள் கலந்துகொள்ள இயலும். அதில், மாணவர்கள், ஆசிரியரிடம் நிகழ்நேர அடிப்படையில் கேள்விகளைக் கேட்கவியலும். இதன்மூலம், இப்பள்ளிகளில் பயிலும் சுமார் 1.90 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைவார்கள்.


**8. 'SAANS' பரப்புரையைத் தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

A) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

B) மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்

**C) சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ☑**

D) ஜல் சக்தி அமைச்சகம்




✓ குழந்தைகளிடையே நிமோனியா இறப்பைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன், 'SAANS' (Social Awareness and Action to Neutralise Pneumonia Successfully) என்னும் பரப்புரையைத் தொடங்கிவைத்தார். இந்தப் பரப்புரையின்கீழ், நிமோனியாவால் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தைக்கு ASHA தொழிலாளர்களால், அமோக்சிசிலின் நுண்ணுயிர் எதிர்ப்பியின் பரிந்துரை முன்னான மருந்து மூலம் சிகிச்சையளிக்கப்படும்.

✓ மேலும், ஒரு குழந்தையின் குருதியில், குறை–உயிர்வளி அளவை அடையாளங்காண்பதற்காக பல்ஸ் ஆக்ஸிமீட்டரை (உயிர்வளியின் செறிவை கண்காணிக்கும் ஒரு சாதனம்) நலவாழ்வு மையங்கள் பயன்படுத்தலாம்; மற்றும் தேவைப்பட்டால், உயிர்வளி உருளைகளைப்பயன்படுத்தி அக்குழந்தைகட்கு சிகிச்சையும் அளிக்கலாம். இந்தப் பரப்புரை, நிமோனியாவிலிருந்து சிறு குழந்தைகளைப் பாதுகாக்கும் நோக்கோடு மக்களை அணிதிரட்டுகிறது.

**9.முதலமைச்சர் கழிவுநீர் தொட்டி தூய்மைப்படுத்துதல் திட்டத்தை (Mukhyamantri Septic Tank Safai Yojana) தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

A) மத்தியபிரதேசம்

**B) தில்லி ☑**

C) உத்தரபிரதேசம்

D) இராஜஸ்தான்



✓ கழிவு மேலாண்மையில் மக்களுக்கு உதவுவதற்கும், துப்புரவு தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்குமாக, தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், அண்மையில், 'முதலமைச்சர் கழிவுநீர்த் தொட்டி தூய்மைப்படுத்துதல்' திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

✓ இத்திட்டத்தின்மூலம், குடியிருப்புகளில் உள்ள கழிவுநீர்த்தொட்டிகளிலிருந்து கழிவுகளைச்சேகரித்தல்; கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து பாதுகாப்பான முறையில் கழிவுகள் வெளியேறுவதை உறுதிசெய்தல் மற்றும் கழிவுநீர்த்தொட்டிகளை சுத்தம் செய்வதற்கான பாதுகாப்பு உபகரணங்களுடன் பயிற்சிபெற்ற ஊழியர்களை பணியிலமர்த்துதல் உள்ளிட்ட மூன்று நோக்கங்களை அடைவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

**10.முதலாவது தேசிய வேளாண் வேதியியல் மாநாடு நடைபெற்ற நகரம் எது?**



A) சென்னை

**B) புது தில்லி ☑**

C) புனே

D) பெங்களூரு

✓ முதலாவது தேசிய வேளாண் வேதியியல் மாநாடானது புது தில்லியில் உள்ள பூசாவில் நடைபெற்றது. இதனை மத்திய வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தொடங்கி வைத்தார். "Country's Status on Various Fronts of Agrochemicals" என்பது நவ.13–16 வரை நடந்த இம்மாநாட்டின் கருப்பொருளாகும். காலநிலைகளுடன் கூடிய நீடித்த வேளாண்–உணவு முறைகளில் இது கவனம் செலுத்தியது. நீடித்த வேளாண்மையில் உள்ள வேளாண் வேதியியல் சிக்கல்கள் குறித்தும் விவாதங்கள் இடம்பெற்றன.

# நடப்பு நிகழ்வுகள்

**1. புதிய வெளியுறவு ஒத்துழைப்புத்துறையை உருவாக்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?**

A) ஒடிசா

**B) ஹரியானா ☑**

C) கர்நாடகா

D) கேரளா

✓ முதலீட்டை மேம்படுத்துதல், வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் திறன்மேம்பாடு மற்றும் ஹரியானாவி கலாசாரத்தை மேம்படுத்துதல் மற்றும் ஹரியானாவி வம்சாவளியினரின் நலன் ஆகியவற்றுக்கான நாடுவாரியாக உத்திகளை வகுப்பதற்காக 'வெளியுறவு ஒத்துழைப்புத் துறை' என்ற பிரத்யேக புதிய துறையொன்றை உருவாக்குவதற்கு ஹரியானா மாநில அரசு முடிவுசெய்துள்ளது.

✓ மேலும், அமைச்சர்கள் தங்கக்கூடிய வீடுகளுக்கான வாடகைப்படியை ₹50 ஆயிரத்திலிருந்து 80 ஆயிரமாக திருத்தி வழங்குவதற்கும், மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்களுக்கென தனியே ₹20,000 என மாதமொன்றுக்கு மொத்தம் ₹1 இலட்சம் கொடுப்பதற்கும் ஹரியானா மாநில அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

**2. நடப்பாண்டு (2019) IMD உலக திறன் தரவரிசையில் இந்தியாவின் தரநிலை என்ன?**

A) 62ஆவது

B) 43ஆவது

C) 53ஆவது

**D) 59ஆவது ☑**

59

✓ குறைவான வாழ்க்கைத்தரம் மற்றும் கல்விக்கான செலவு ஆகியவற்றின் காரணமாக நடப்பாண்டு (2019) IMD உலக திறன் தரவரிசையில் 63 நாடுகளுள் இந்தியா 59ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தப் பட்டியலில், சுவிச்சர்லாந்து முதலிடத்திலும், அதைத்தொடர்ந்த இடங்களில் டென்மார்க், சுவீடன் மற்றும் ஆஸ்திரியா ஆகிய நாடுகளும் உள்ளன. முதலீடு & மேம்பாடு, கோரிக்கை மற்றும் தயார்நிலை ஆகிய மூன்று முக்கியப்பிரிவுகளில் செயல்திறனை அடிப்படையாகக் கொண்டுள்ளது இத்தரவரிசை.

**3. பாரதீய போஷான் கிருஷி கோஷை தொடங்க முடிவுசெய்துள்ள மத்திய அமைச்சகம் எது?**

A) நிதி அமைச்சகம்

B) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

C) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ☑

D) மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்



✓ பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையுடன் இணைந்து மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டமைச்சகமானது புது தில்லியில், பாரதீய போஷான் கிருஷி கோஷை (BPKK) தொடங்கியது. சிறந்த ஊட்டச்சத்து விளைவுகளுக்காக நாட்டில் உள்ள 128 வேளாண்–காலநிலை மண்டலங்களைச் சேர்ந்த பல்வேறு பயிர்களின் களஞ்சியமாக BPKK உள்ளது.

**4. "Roar of the Sea" என்ற இருதரப்பு கடல்சார் பயிற்சியானது, இந்தியாவுக்கும் எந்த நாட்டுக்கும் இடையே தொடங்கியுள்ளது?**

**A) கத்தார் ☑**

B) ஜப்பான்

C) ஆப்கானிஸ்தான்

D) சவுதி அரேபியா




✓ கத்தார் & இந்தியாவுக்கும் இடையேயான "சயீர்–அல்–பர் (கடலின் கர்ஜனை)" என்ற தலைப்பிலான முதலாவது இருதரப்பு கடல்சார் கூட்டுப் பயிற்சியானது தோகாவில் தொடங்கியுள்ளது. இந்தப் பயிற்சி, இரண்டு நாட்டு கடற்படைகளுக்கிடையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதையும் இயங்குதன்மையை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.


**5.திறமைகளை வளர்ப்பதற்காக, 'Grassroot Olympic – Mission Talent Hunt' என்றவொன்றை தொடங்க முடிவுசெய்துள்ள மாநில ஒலிம்பிக் சங்கம் எது?**

A) ஒடிசா

B) இராஜஸ்தான்

**C) அஸ்ஸாம் ☑**

D) பஞ்சாப்



✓ விளையாட்டில் திறமையுள்ளவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சியளிப்பதற்காக 'Grassroot Olympic – Mission Talent Hunt' என்ற புதிய திட்டத்தை தொடங்க அஸ்ஸாம் ஒலிம்பிக் சங்கம் முடிவுசெய்துள்ளது. 10 முதல் 60 வயதுக்குட்பட்ட வீரர் / வீராங்கனைகளை உள்ளடக்கிய 5 பிரிவுகளில், அஸ்ஸாம் ஒலிம்பிக் சங்கம் விளையாட்டு நிகழ்வுகளை நடத்தும்.

**6. "The Daughter from a Wishing Tree Unusual Tales about Women in Mythology" என்ற நூலின் ஆசிரியர் யார்?**

A) சுதா சந்திரன்

**B) சுதா மூர்த்தி ☑**

C) கிரண் பேடி

D) இலட்சுமி வேணு



✓ "The Daughter from a Wishing Tree Unusual Tales about Women in Mythology" என்ற நூலை பிரபல எழுத்தாளரும் இன்போசிஸ் அறக்கட்டளையின் தலைவருமான சுதா மூர்த்தி எழுதியுள்ளார். புராணகாலத்தைச் சேர்ந்த பெண்களின் சொல்லப்படாத ஏராளமான கதைகளை இந்நூல் சொல்லும். காலஞ்சென்ற ஒருவரை மீண்டும் உயிரோடு வரவழைக்கும் ஒரு மந்திரம் பற்றியும், தேவதைகளை பரிசாக வழங்கும் ஒரு கற்பகத்தரு பற்றியும் இந்நூல் விளம்புகிறது. மேலும், பல்வேறு ஆர்வத்தைத் தூண்டும் கேள்விகளுக்கும் இந்நூலில் விடையுண்டு.


**7. தேசிய கால்–கை வலிப்பு நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?**

A) நவம்பர் 15

B) நவம்பர் 16

**C) நவம்பர் 17 ☑**

D) நவம்பர் 18




✓ இந்தியாவில் கால்–கை வலிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவ.17 அன்று தேசிய கால்–கை வலிப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. கால்–கை வலிப்பு என்பது மூளை சார்ந்த ஒரு நாள்பட்ட கோளாறாகும். இது தொடர்ச்சியான வலிப்பினால் ஏற்படுகிறது. நியூரான்களில் (மூளை செல்கள்) திடீரென அதிகப்படியான மின்கசிவு ஏற்படுவதன் விளைவாக வலிப்பு ஏற்படுகிறது. இந்த நிலையானது, எந்த வயதுசார்ந்த மக்களையும் பாதிக்கும் மற்றும் ஒவ்வொரு வயதினருக்கும் இதனால் ஏற்படும் சிக்கல்கள் வித்தியாசமாக இருக்கும்.

**8. நடப்பாண்டில் (2019) வரும் உலக கழிப்பறை நாளுக்கான கருப்பொருள் என்ன?**

A) Toilets and Nutrition

B) Follow the Flush

C) When Nature Calls

**D) Leaving No One Behind ☑**




✓ உலகளாவிய துப்புரவு நெருக்கடியை கையாளுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவ.19 அன்று உலக கழிப்பறை தினம் அனுசரிக்கப்படுகிறது. "Leaving No One Behind" என்பது நடப்பாண்டில் வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும். அடிப்படைக்கழிப்பறை வசதிகள் பற்றியும், அதுகுறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதுமே இந்நாளின் முக்கிய நோக்கமாகும்.

**9. உலகம் முழுவதும் மலிவான இணைய சேவையை வழங்குவதற்காக 60 ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள்களை ஏவியுள்ள நிறுவனம் எது?**

**A) ஸ்பேஸ் X ☑**

B) புளூ ஆர்ஜின்

C) விர்ஜின் கேலடிக்

D) போயிங்



- ✓ எலன் மஸ்கின் நிறுவனமான ஸ்பேஸ் X, அண்மையில், புளோரிடாவில் உள்ள கேப் கனாவெரலில் உள்ள விமானப்படைத்தளத்திலிருந்து 60 ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவியது. உலகம் முழுமைக்கும் நம்பகமான இணைய சேவையை அளிப்பதே இதன் நோக்கமாகும்.
- ✓ அகலக்கற்றை இணையச்சேவைகளுக்காக 280 கிமீ., உயரத்தில் ஸ்டார்லிங் செயற்கைக்கோள்கள் நிலைநிறுத்தப்படும். இச்செயற்கைக்கோள்கள், ஸ்பேஸ் X இணையச்சேவைத் தொகுப்பின் 2ஆவது தொகுதியாகும். தாழ்புவி சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இச்செயற்கைக்கோள் தொகுதிகள், கிராமப்புறங்கள் உட்பட இணைய இணைப்பு இல்லாத இடங்களுக்கும் கூட விரைவான நம்பகமான இணையச் சேவையை வழங்கும்.

**10. ஜெயக்வாடி அணை அமைந்துள்ள ஆறு எது?**

A) கிருஷ்ணா

B) காவிரி

**C) கோதாவரி ☑**

D) மகாநதி



- ✓ மகாராஷ்டிர மாநிலம் ஔரங்காபாத் மாவட்டத்தின் பைதான் வட்டத்தில் அமைந்துள்ள ஜெயக்வாடி கிராமத்தில் பாயும் கோதாவரி ஆற்றில் ஜெயக்வாடி அணை அமைந்துள்ளது. அண்மையில் இந்த அணையில் நிறுவப்பட்டிருந்த நிலநடுக்கமானி, திரவ அழுத்தமானி, புவியழுத்தமானி, சாய்வுமானி உள்ளிட்ட பல முக்கிய கருவிகள் ஒருசேர சரியாக செயல்படாமல்போன காரணத்தால் இவ்வணை செய்திகளில் இடம்பெற்றது.
- ✓ 1993ஆம் ஆண்டில் லாதூர் மாவட்டத்தில் கில்லாரி என்ற இடத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை அடுத்து ஜெயக்வாடி அணையில் நிலநடுக்கமானி நிறுவப்பட்டது. 10,000 கி.மீ. வரை வீச்செல்லை கொண்டது இந்தக்கருவி. கடந்த காலங்களில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இரஷ்யா, நேபாளம் போன்ற நாடுகளில் ஏற்பட்ட நிலநடுக்கங்களின் நடுவத்தைக்கூட இது பதிவு செய்துள்ளது.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ 17ஆவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவுக்காக தமிழ்நாடு அரசு சார்பில் ₹75 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 17ஆவது சென்னை சர்வதேச திரைப்பட விழா, டிச.12–19 வரை சென்னையில் நடைபெறவுள்ளது.
- ✓ ஒடிசா மாநிலத்தில் உள்ள செஞ்சுரியன் பல்கலைக்கழகம் சார்பில் நடிகர் கமல்ஹாசனின் கலை சேவையைப்பாராட்டி அவருக்கு கௌரவ முனைவர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது. இதனை, ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் வழங்கினார்.

## நடப்பு நிகழ்வுகள்

**1. மத்திய அரசு தடை விதித்துள்ள ஹைனிடிரப் தேசிய விடுதலை கவுன்சிலானது (Hynniewtrep National Liberation Council) எந்த மாநிலத்தைச் சார்ந்த கிளர்ச்சிக் குழுவாகும்?**

A) ஒடிசா

**B) மேகாலயா ☑**

C) கர்நாடகா

D) கேரளா



✓ பல வன்முறை சம்பவங்களுக்கு காரணமான மேகாலயாவைச் சார்ந்த ஹைனிடிரப் தேசிய விடுதலை கவுன்சில் என்னும் கிளர்ச்சியாளர்கள் அமைப்பை மத்திய உள்துறை அமைச்சகம் தடை செய்துள்ளது. சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச்சட்டம், 1967'இன்கீழ் மத்திய அரசு HNLC அமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய அத்தனை அமைப்புகளையும் 'சட்டவிரோதமானது' என அறிவித்து மத்திய உள்துறை அமைச்சகம் தடை விதித்துள்ளது.

**2. 2020 ஜனவரி மாதத்திற்குள் அருந்ததி தங்கத்திட்டத்தை தொடங்க முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

A) தமிழ்நாடு

B) மேற்கு வங்கம்

**C) அஸ்ஸாம் ☑**

**D)** கேரளா



✓ புதிதாக திருமணமாகி அதனை சட்டப்படி பதிந்த தம்பதிகளுக்காக வரும் 2020 ஜனவரியில், அருந்ததி தங்கத்திட்டத்தைத் தொடங்க அஸ்ஸாம் அரசு முடிவுசெய்துள்ளது. இந்தத்திட்டத்தின் கீழ் மணமகளுக்கு தங்கம் வாங்குவதற்காக ₹30,000 வழங்கப்படும்.

✓ சட்டபூர்வ திருமணப்பதிவுகளை ஊக்குவித்தலும் மாநிலத்தில், சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்ட வயதுக்குக்கீழ் நடைபெறும் திருமணங்களைத் தடுப்பதுமே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இதில் பலன்பெற விரும்பும் மணமகள் 18 வயதானவராகவும், மணமகன் 21 வயது நிரம்பியவராகவும் இருக்க வேண்டும். மணமகள் குடும்பத்தாருக்கு இதற்கான அதிகபட்ச ஆண்டு வருமான உச்சவரம்பு ₹5 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**3. நடப்பாண்டுக்கான 'PETA இந்தியாவின் ஆண்டின் சிறந்த நபர்' என அறிவிக்கப்பட்டுள்ளவர் யார்?**

A) K S பணிக்கர் இராதாகிருஷ்ணன் **B) விராட் கோலி ☑**

C) ஷஷி தரூர் D) R மாதவன்

- ✓ இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் விராட் கோலி, '2019ஆம் ஆண்டின் சிறந்த மனிதர்' என விலங்குகள்நல அமைப்பான PETA தேர்வுசெய்துள்ளது. விலங்குகள்மீது பெருநேசங்கொண்ட விராட் கோலி, அண்மையில், அமர்கோட்டையில் ஒரு யானையை எட்டுப்பேர்கொண்ட குழு துன்புறுத்–தியதை தடுக்கக்கோரி PETA அமைப்பின் சார்பாக கடிதம் எழுதி அந்த யானையை மீட்க உதவினார்.
- ✓ பெங்களூருவில் ஏராளமான நாய்கள் உரிமையாளர்களால் கைவிடப்பட்டு, சாலையில் காயத்துடன் சுற்றித்திரியும் நாய்களுக்கு வசிப்பிடம் அமைக்க கோலி உதவினார். மேலும், தனது இரசிகர்களுக்குக் கோரிக்கை விடுத்து, நாய்களைத் தத்தெடுத்து வளர்க்கவும் அறிவுறுத்தினார்.s

## 4.பெட்ரோ கெமிக்கல் முதலீடு குறித்த குழுவின் தலைவர் யார்?

A) P இராகவேந்திர ராவ்

B) S சௌத்ரி

C) பிரதீப் சர்மா

**D) இரஜத் பார்கவா ☑**



- ✓ நாட்டிலுள்ள பெட்ரோலியம், வேதிகள் மற்றும் பெட்ரோவேதி முதலீட்டு பிராந்தியங்களில் (PCPIR) அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்கு தேவையான கொள்கை முன்முயற்சிகளை பரிந்துரைப்பதற்காக மத்திய வேதியியல் மற்றும் பெட்ரோவேதிகள் துறையானது ஆந்திராவின் மூத்த அதிகாரியான இரஜத் பார்கவாவை உயர்மட்டக்குழுவின் தலைவராக நியமித்துள்ளது.
- ✓ PCPIR கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், மத்திய அரசு அதனைத் திருத்தம்செய்ய முயற்சிப்பது இதுவே முதல்முறையாகும். PCPIR கொள்கையின்படி, மேலைக்கடற்கரையில் உள்ள தகேஜ் (குஜராத்) மற்றும் கீழைக்கடற்கரையில் உள்ள விசாகப்பட்டினம்–காக்கினாடா (ஆந்திரா), பாரதீப் (ஒடிசா) மற்றும் கடலூர்–நாகப்பட்டினம் (தமிழ்நாடு) ஆகிய நான்கு PCPIR'களை மத்திய அரசு அங்கீகரித்துள்ளது. விசாகப்பட்டினம் – காக்கினாடா PCPIR ஆனது வங்காள விரிகுடாவில் 640 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள நாட்டின் மிகப்பெரிய PCPIR ஆகும்.

## 5.குடியரசுத்தலைவரின் வண்ண விருதுடன் கௌரவிக்கப்பட்டுள்ள இராணுவப்பிரிவு எது?

A) மகார் ரெஜிமென்ட்

B) இராஜ்புதன ரைபிள்ஸ்

**C) இந்திய கடற்படை அகாடமி ☑**

D) கர்வால் ரைபிள்ஸ்



- ✓ முப்படைகளின் தலைமைத்தளபதியும் இந்திய குடியரசுத்தலைவருமான இராம்நாத் கோவிந்த், கேரள மாநிலம் கொச்சியில் ஏழிமலாவில் அமைந்துள்ள இந்திய கடற்படை அகாடமிக்கு (INA), வண்ண விருதை (President's Colour Award) வழங்கினார். இவ்விருது இராணுவப்பிரிவுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த கௌரவமாகும்.

✓ கோவா, கொச்சின் & ஏழிமலா ஆகிய மூன்று வெவ்வேறு இடங்களில் கடந்த 50 ஆண்டுகளாக இந்திய கடற்படை அதிகாரிகளுக்கு பயிற்சியளிப்பதிலும் அவர்களை உருவாக்குவதிலும் இந்த அகாடமி ஆற்றிய சிறந்த சேவையை அங்கீகரிக்கும் விதமாக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

### 6. நடப்பாண்டில் (2019) வரும் உலக குழந்தைகள் நாளுக்கான கருப்பொருள் என்ன?




A) Protect Child, Protect World

**B) Children of today, our keepers tomorrow ☑**

C) Children are taking over and turning the world blue

D) Kids Take Over

✓ குழந்தைகளிடையே சர்வதேச ஒற்றுமை, விழிப்புணர்வு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காகவும், அவர்களின் நலன்களை காப்பதற்காகவுமாக ஒவ்வோர் ஆண்டும் நவ.20 அன்று உலக குழந்தைகள் நாள் கொண்டாடப்படுகிறது. "Children of today, our keepers tomorrow" என்பது நடப்பாண்டில் (2019) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

✓ குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான சாசனம் நிறைவேற்றப்பட்டு நடப்பாண்டுடன் (2019) முப்பது ஆண்டுகள் நிறைவடைவதால் இந்த ஆண்டு (2019) சிறப்புமிக்கதாக பார்க்கப்படுகிறது.

### 7. 'மூன்றாம் நடுவர்' RT-PCR எந்திரங்களை நிறுவியுள்ள இந்தியாவின் முதல் நகரம் எது?



A) மும்பை

B) சென்னை

**C) கொல்கத்தா ☑**

D) தில்லி

✓ டெங்கு, காசநோய் மற்றும் பன்றிக்காய்ச்சல் போன்ற நோய்களை விரைவாகக் கண்டறிவதற்காக இந்தியாவில் முதல் அதிநவீன Reverse Transcription – Polymerase Chain Reaction (RT-PCR) எந்திரங்களை கொல்கத்தா மாநகராட்சி மன்றம் நிறுவியுள்ளது. மருத்துவ அறிக்கைகள் மற்றும் இரத்த பரிசோதனைகள் முரண்பாடான முடிவுகளை வெளிப்படுத்தும் சூழ்நிலைகளில், இந்த எந்திரங்கள் மூன்றாம் நடுவராக இருந்து பணியாற்றும்.

✓ நோய்க்கான சரியான காரணத்தைக்கண்டறியும் பொருட்டு இரத்த பரிசோதனைகள் குறித்த துல்லியமான DNA அறிக்கையை அளிப்பதே இந்த எந்திரங்களின் நோக்கமாகும். இந்த எந்திரங்கள் மூலம், சோதனைகள் இலவசமாகவே நடத்தப்படும்.

**8.தங்கத்தேர் இரயிலை பிரபலப்படுத்தவும் இயக்கவும், எந்த மாநில சுற்றுலாத்துறையுடன் IRCTC ஒப்பந்தம் செய்துள்ளது?**

A) தமிழ்நாடு

**B) கர்நாடகா ☑**

C) மகாராஷ்டிரா

D) கேரளா




✓ 'Golden Chariot' இரயிலை பிரபலப்படுத்தவும் இயக்கவும் கர்நாடக மாநில சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்துடனான (KSTDC) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்திய ரயில் உணவுவழங்கல் மற்றும் சுற்றுலா கழகம் (IRCTC) கையெழுத்திட்டுள்ளது. IRCTC, இரயிலின் அகபுதுப்பிப்பை மேற்கொண்ட பின்னர் வரும் 2020 மார்ச் முதல் இரயிலை இயக்கத்தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ இந்த இரயிலின் புதிய பயணத்திட்டங்கள் வரலாறு, கலாசாரம், வனவுயிரி ஆகியவற்றின் கலவையாக இருக்கும். இப்பயணத்திட்டத்தில் பந்திப்பூர், மைசூர், ஹலேபீது, சிக்மகளூர், ஹம்பி, பீஜப்பூர் மற்றும் கோவா ஆகியவற்றை சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி, KSTDC, விரைவில் இரயிலின் கட்டுப்பாட்டை IRCTC'யிடம் ஒப்படைக்கும்.

**9. NASA அறிவியலாளர்கள், அண்மையில், வியாழன் கோளின் எந்தத் துணைக்கோளில் நீராவியைக் கண்டுபிடித்தனர்?**

A) கன்மீட்

**B) யூரோபா (Europa) ☑**

C) காலிஸ்டோ

D) ஐயோ



✓ வியாழன் கோளின் பனிநிலவான யூரோபாவின் மேற்பரப்பிற்கு மேலே நீராவி இருப்பதை NASAஇன் அறிவியலாளர்கள் முதன்முறையாக, ஹவாயில் உள்ள W.M. கெக் ஆய்வகத்தைப் பயன்படுத்தி கண்டுபிடித்துள்ளனர். யூரோப்பாவிலிருந்து ஒரு வினாடிக்கு 5202 பவுண்டுகள் நீர் வெளியேறுவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்; இது sஒரு ஒலிம்பிக் அளவிலான நீச்சல்குளத்தை சில நிமிடங்களில் நிரப்பும்.

**10.மேலைக்கரையில் உள்ள இஸ்ரேலிய குடியேற்றங்கள் பன்னாட்டுச்சட்டங்களை மீறுவதாக இல்லை என அறிவித்துள்ள நாடு எது?**

A) ஐக்கிய பேரரசு

B) இரஷ்யா

**C) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) ☑**

D) பிரான்ஸ்



- ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன நிலமான "மேலைக்கரை"யில் உள்ள இஸ்ரேலிய குடியேற்றங்கள் பன்னாட்டுச்சட்டங்களை மீறுவதாக இல்லையென அமெரிக்கா சமீபத்தில் அறிவித்தது. அமெரிக்காவின் இவ்வறிவிப்பு, மேலைக்கரையில் உள்ள குடியேற்றங்கள் பன்னாட்டுச்சட்டத்தின் "அப்பட்டமான மீறல்" எனக்கூறும் ஐ.நா பாதுகாப்பு அவையின் 2016ஆம் ஆண்டு தீர்மானத்தை அமெரிக்கா நிராகரித்ததை குறிக்கிறது. அதுமட்டுமின்றி, 1949ஆம் ஆண்டின் 4ஆவது ஜெனீவா சாசனத்தையும் இது நிராகரித்தது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- தமிழ்நாட்டில் மாநகராட்சி மேயர், நகராட்சி மற்றும் பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவிகளுக்கு மறைமுகத் தேர்தல் மூலமாகத் தேர்வுசெய்வதற்கான அவசரச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக சென்னை மாநகராட்சி சட்டம் (1919); தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (1920); மதுரை மாநகராட்சி சட்டம் (1971); கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் (1981) ஆகியவற்றில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

---